# நான்கு சுவிசேஷங்களும் இயேசுவைப் பற்றி சாட்சி கூறுகின்றன

**நான்கு சுவிசேஷங்களும் எவ்வாறு ஒன்று போல் இருக்கின்றன,**
**எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.**

சிறுவர்களுக்குப் போதிப்பவர்கள் பாடம் G2b யைப் படிக்கவும்

ஜெபத்தாலும், தேவ வார்த்தையாலும் உங்களை **ஆயத்தப்படுத்துங்கள்.**

**ஜெபம்:** “பரிசுத்தமுள்ள தகப்பனே, உமது மகனாகிய இயேசுவைக் குறித்து எங்களுக்கு சாட்சியளித்து, நான்கு சுவிசேஷங்களையும் எங்களுக்கு அளித்தீர். அவற்றை அறியவும், கீழ்ப்படியவும், பிறருக்குப் போதிக்கவும் எங்களுக்குக் கிருபை தாரும்.”

## 1. பின்னணி :

- பண்டைக் காலமுதலே ஒரே சாட்சியை விடவும் பல சாட்சிகளே வலிமையுள்ளதாக இருந்து வருகின்றன. மோசேயின் நியாயப் பிரமாணத்தின் படி, ஒரு வழக்குக்கு இரண்டு அல்லது மூன்று சாட்சி தேவைப்படுகின்றன.
- இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதகம் குறித்து பரிசுத்த ஆவியானவர் நமக்கு நான்கு சாட்சிகளைக் கொடுத்திருக்கிறார். மாற்கு, மத்தேயு, லூக்கா, யோவான் என்பவர்களே தொகுத்து நான்கு சுவிசேஷங்களையும் எழுதியவர்கள்.
- இயேசு இந்த மண்ணில் இருந்த போது இந்த நான்கு சுவிசேஷ எழுத்தாளர்களும் வாழ்ந்தனர். மூன்று பேருக்கு அவரை நன்கு தெரியும். லூக்கா இயேசுவைப் பற்றிய உண்மைகளை ஆய்ந்து அறிந்தவர் (லூக்கா 1:1-3). ஆகவே, இந்த நான்கு சுவிசேஷங்களும் “கண்ணால் கண்ட” சாட்சிகள். மிகவும் பலமானவை.
- இந்த நான்கு எழுத்தாளர்களுக்கும் இயேசுவைப் பற்றிய ஒரே சம்பவங்களைத் தங்கள் சுவிசேஷங்களில் இணைத்துள்ளனர். ஒவ்வொருவரும் மற்றவர்கள் எவரும் சேர்க்காத சில விஷயங்களை சேர்த்துள்ளனர். இருந்தாலும் அனைவரும் ஒத்துப் போகின்றனர்; இந்த நான்கு சுவிசேஷங்களுமே ஒரே உண்மைக் கதையாகும்.
- நூற்றாண்டுகளுக்குப் பின், வேறு மதங்கள் இயேசுவைப் பற்றிய கதையை மாற்ற முனைந்தனர். ஆனால் நாம் மூல சுவிசேஷங்கள் நான்கையும் நம்பலாம்.



**புகழ்பெற்ற 17 ம் நூற்றாண்டு சித்திரம்**

சுவிசேஷங்கள் எங்கிருந்து வந்தன என்பதை **லூக். 1:1-4 ல் காண்க.**

நான்கு சுவிசேஷங்களையும் எழுதிய ஒவ்வொருவரின் பெயரையும், முக்கியமான தனிமனிதப் பண்புநலன்களையும் **மனனம் செய்க.**

**மாற்கு**

- இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது மாற்கு இளம் வாலிபனாக இருந்தார்.
- அவர் ஒரு யூத குடும்பத்தைச் சார்ந்தவர். இயேசுவைப் பார்த்தார். அப்போஸ்தலர் பேதுருவை நன்றாக அறிந்தவர்.

- பின்னர் அவர் பவுல் அப்போஸ்தலருடன் சேவை செய்தார். மற்றவர்களை விடவும் முதலில் இவரே தனது சுவிசேஷத்தை எழுதி இருக்கக் கூடும்.
- இதுவே சிறிய சுவிசேஷ நூல். பெரும்பான்மையும் இயேசுவின் செயல்களைக் கூறுகிறது. ரோமாபுரி மக்கள் வல்லமையை மிகவும் மதிப்பவர்களாதலால் குறிப்பாக மாற்கு சுவிசேஷத்தை வாசிக்க விரும்பினர்.

மத்தேயு

- மத்தேயு தீவிரமான யூதர் 'என்னைப் பின்பற்றி வா' என்று இயேசு கூறும் வரை அவர் சுங்க வரி வசூலிப்பவராக இருந்தார்.
- அவர் மாற்கு சுவிசேஷத்தில் சில பகுதிகளை பயன்படுத்தி, தான் தனிப்பட்ட முறையில் அறிந்த பல விஷயங்களை சேர்த்தார்.
- யூத மக்கள் இயேசுவைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்ட நிறைய விஷயங்களை அவர் கூறுகிறார்.

லூக்கா

- யூதர் அல்லாத மருத்துவரான லூக்கா இயேசு மரித்து உயிர்த்தெழுந்தபின் ஒரு விசுவாசியானார்.
- அவர் அப்போஸ்தலர் பவுலோடு பயணம் செய்தார். யூதேயாவில் பவுல் சிறையில் இருந்த போது, லூக்கா அங்கு பயணம் சென்று, இயேசுவைப் பற்றி நேரில் கண்ட சாட்சிகளை விசாரித்து அறிந்தார்.
- லூக்கா, இயேசுவைப் பற்றியும் அவர் சந்தித்தவர்களைப் பற்றியும் விளக்குவதின் மூலம், யூதேயாவில் அவர் நேரில் கண்ட சாட்சிகளை கவனமாகக் கேட்டார் என்பது வெளிப்படுகிறது.
- யூதர் அல்லாதவர்களை கவரக் கூடிய பல வரலாற்று மற்றும் மருத்துவ உண்மைகளை லூக்கா சேர்க்கிறார்.

யோவான்

- இயேசுவை சந்திக்கும் வரை யோவான், யோவான் ஸ்நானகனின் சீஷராக இருந்தார். பின் இயேசுவைத் தீவிரமாகப் பின்பற்றுகிறவராய் மாறினார்.
- யோவான் நீண்ட நாள் வாழ்ந்தார். இறப்பதற்கு முன், மற்ற சுவிசேஷங்கள் சொல்லாமல் விட்ட விஷயங்களை சேர்த்து எழுதினார்.
- எந்தப் பின்னணியை உடைய கிறிஸ்தவர்களும் வாசித்து மகிழும்படியான இயேசுவின் நீண்ட பேச்சுகளை அவர் பதிவு செய்தார்.

  இந்த நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களை ஒன்றிணைந்து கூறுகின்றன.

  மேலும், அவரது பல போதனைகளையும், கட்டளைகளையும், வாக்குத்தத்தங்களையும் கூறுகின்றனர்.

- எல்லா சுவிசேஷங்களும், இயேசு எவ்வாறு சிலுவையில் அறையப்பட்டார், அடக்கம் செய்யப்பட்டார், உயிர்த்தெழுந்து பல சாட்சிகளுக்கு தென்பட்டார் என்பதை எழுதுகின்றன.
- நான்கு சுவிசேஷங்களையும் வாசித்து விவரங்களைக் கூறுவதே மற்றவர்களுக்கு சுவிசேஷம் கூறும் சிறந்த வழியாகும்.

## 2. வரும் வாரத்துக்கான நடவடிக்கைகளை உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்.

- நான்கு சுவிசேஷர்களின் ஆசிரியர்கள் யார், அவர்களது எழுத்துக்கள் எவ்விதம் ஒன்றுபடுகின்றன, வேறுபடுகின்றன என்பதை ஒன்றாக அமர்ந்து **விவாதிக்கவும்.**
- விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளின் வீடுகளை **சந்திக்கவும்.**

- இயேசுவை அறிந்த மக்களிடமிருந்து பெற்ற உண்மை சம்பவத்தையே நான்கு சுவிசேஷங்களும் தருகின்றன என்பதை **விளக்கவும்.**
- ஏதாவது ஒரு சுவிசேஷத்தின் நகலை **அவிசுவாசிகள்** படிக்கும்படி விட்டு வரவும்.
- ஒரு சுவிசேஷத்தை வாசிக்கும் திட்டத்தை **விசுவாசிகளிடம்** கொடுத்து வரவும்.

## 3. வரும் சபை ஆராதனைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டம் இடவும்

**குழந்தைகள்** ஆயத்தம் செய்த நாடகம் மற்றும் கேள்விகளை முன் வைக்கட்டும்.

நான்கு சுவிசேஷங்களும் உண்மை வரலாறு என்பதையும், பொய்யான தெய்வங்களையும் ஒரு சிலரின் சொப்பனங்களையும் பற்றிய கதைகளைக் கூறும் பிற மத புத்தகங்களை விட வேறுபட்டது என்பதையும் **விளக்குக.**

**நான்கு விசுவாசிகள்** மாற்கு, மத்தேயு, லூக்கா, யோவான் ஆகியோர்களாக பாவித்துக் கொள்ளவும். தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, பகுதி 1 ல் பட்டியலிடப்பட்ட உண்மைகளை விளக்கிக் கூறவும்.

**மாற்கு :** என் பெயர் மாற்கு. நான் முதல் ஊழியப் பயணத்தில் பவுலோடும் பர்னபாவோடும் சென்றேன். ஆனால் அச்சமடைந்து திரும்பி வந்து விட்டேன். பவுல் நீண்ட நாட்களாக என் மேல் கோபமாக இருந்தார். ஆனால் கடைசியாக என்னை மன்னித்து, எனது உதவியைக் கேட்டார்.

**மத்தேயு :** நான்தான் அப்போஸ்தலனாகிய மத்தேயு. லேவி என்றும் என்னை அழைப்பார்கள். நான் ரோமானியர்களுக்காக வரி வசூலித்தேன். இதனால் யூதர்கள் என் மேல் கோபம் அடைந்தனர். இயேசுவைப் பின்பற்றத் தொடங்கும் வரை எனக்குப் பல வெகு மோசமான நண்பர்கள் இருந்தனர்.

**லூக்கா :** நான் ஒரு மருத்துவன். பெரும்பான்மையான கிரேக்கர்களைப் போல இயேசுவின் போதகத்தையே நான் விரும்புகிறேன். இயேசுவைப் பற்றிக் கூறி, ஒரு புதிய சபையாக மக்களை இணைக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களை மாற்றுவதைப் பார்த்தேன்.

**யோவான்:** நான் யோவான். காலியாய் இருந்த இயேசுவின் கல்லறைக்கு முதலில் வந்த சீடன் நானே. தியாக பலியாய் மரணம் அடையாத ஒரே அப்போ ... ட்டுமே. நாடு கடத்தப்பட்டாலும், இயேசுவைப் பற்றிய செய்தியை எழுதும்படி நான் வ ... வரை தேவன் என்னை வாழும்படி அனுமதித்தார்.



சுவிசேஷம் பற்றிய செய்திகள் எவ்வாறு தங்களுக்கு ... சுவாசிகள் சத்தமாகக் கூறவும்.

மத். 27:27-31 ஐ வாசித்து கர்த்தரின் ... க்கவும். இயேசுவின் பாடு நமது பாவங்களுக்கான அபராதம் என்பதை விளக்கவும். அவர் நமக்காகப் பாடுபட்டு மரித்தார். ஒவ்வொரு தடவையும் கர்த்தரின் பந்தியை ஆசரிக்கும் போது இதை நாம் **நினைவு கூருகிறோம்.**

சேர்ந்து யோவான் 8:31-32 ஐ **மனனம் செய்க.**

7ஆம் நூற்றாண்டை சார்ந்த சித்திரம். லிண்டிஸ்ஃபர்னே சுவிசேஷம் என்று அழைக்கப்பட்டது.







மாற்கு மத்தேயு லூக்கா யோவான்

Copyright @ 2004 by paul-timothy. May be freely copied.
Download from www.paul-timothy.net